1980 பிப்ரவரி 5]

கொள்கிறேன். நான் குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், பல சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த அணைக்கட்டு கட்டப்பட வேண்டுமென்று கூறுகிறார்கள். ஆனால், ஒருவர் மட்டுமே, முன்னாள் சபாநாயகராக இருக்கக்கூடிய ஒரு உறுப்பினர் மட்டுமே அதைக் கட்டக் கூடாது என்று சொல்வது ஏதோ தனக்காக அல்லது தன்னுடைய நண்பர்களுக்காக அதைச் சொல்லுகின்றாரோ ?

திரு. சி. ஆறுமுகம் : ஒரே ஒரு உறுப்பினர் என்று சொல்வது தவறு.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் எந்தக் கேள்வியைக் கேட்டாலும், அவர்கள் தனக்காகக் கேட்கின்றார்கள் என்ற அப்படையில் பேசுவது சட்டமன்ற மரபுக்கு மாறுபட்டது. இருந்தாலும், இப்படிப் பட்ட கேள்விகளில் நான் ஒரு பொதுப்படையான கேள்வியை அரசிடம் கேட்க விரும்புகிறேன். ஏற்கனவே பயன்பெறும் ஆயக்கட்டுக்காரர்கள் ''பிரியாரிடி ரைட்'' அதாவது ''முன்னுரிமை'' என்பது அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கை. அந்த ஆயக்கட்டுக்காரர்கள் ஏற்கனவே தாங்கள் பெற்றுள்ள முன்னுரிமை பாதிக்காத வகையில், அதற்கான விதி முறைகளை இந்த அரசு பரிசீலித்து, ஏற்கனவே அந்தப் பகுதி களில் இருக்கின்ற ஆயக்கட்டுதாரர்கள் உரிமைகள் பாதிக்காத அடிப்படையிலே, அந்த உத்தரவாதத்தின் அடிப்படையிலே அரசாங்கம் செயல்பட முன் வருமா ?

[முற்பகல் 10·10.]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : நான் ஏற்கனவே பாசன வசதி பெற்றுக் கொண்டிருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களுடைய முன்னுரிமை பாதிக்காத வண்ணந்தான் அணைக்கட்டுத் திட்டத்தை எடுத்துக் கொள்ள இருக்கிறோம் என்பதை கூறியிருக்கிறேன்.

Training in Poultry development.

* Q. No· 56—Thiru SALEM M. ARUMUGAM ; Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state.—

(a) whether any training in poultry development was imparted at the Poultry Research Station, Nandanam, Madras, during June 1979 to persons interested to augment their incomes; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) ஓர் ஆண்டில் பணியில் இல்லா பட்டதாரிகளுக்காக மூன்று பயிற்சிகளும், எஸ்.எஸ்.எல்.சி. தேறி பணிபுரிபவர்களுக்காக நான்கு பயிற்சிகளும் நந்தனத்தில் உள்ள கோழி வளர்ப்பு ஆராய்ச்சி நிலையத்தில் கொடுக்கப்படுகின்றன. இதற்கான போதனைக் கட்டணம் ரூ. 10 பயிற்சி முடிவில் தேர்விற்குப் பின் ஒரு சான்றிதழ் வழங்கப்படுகிறது.

தூத்துக்குடி மருத்துவமனை.

*வினா எண் 57— திரு. ந. தனசேகரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா—

தூத்துக்குடி மருத்துவமனையை விரிவு படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தூத்துக்குடி மருத்துவமனையில் 260 படுக்கைகள் கொண்ட ஒரு வார்டு கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும் 1979–80 ல் இம் மருத்துவமனைக்கு எக்ஸ் கதிர் வாங்குவதற்காக ரூ. 1.50 இலட்சம் தொடரும் இனச் செலவுக்காகவும் ரூ. 11,000 தொடரா இனச் செலவுக்காகவும் வரவு செலவுப் பட்டியலில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திரு. ந. தனசேகரன் : தூத்துக்குடி நகரம் விரிவடைந்த நகரமாகப் பெருகி வரும் காரணத்தால் ஒதுக்கப்படுகிற தொகை போதாது என்ற குறைபாடு இருப்பது அரசுக்குத் தெரியுமா? மருத்துவ மனை விஸ்தரிக்கும்திட்டம் ஆய்விலுள்ளது, முடிவடைகின்ற நிலையிலுள்ளது என்று சொல்லும் அமைச்சர் அவர்கள அந்தத் திட்டம் எப்போது முற்றுப்பெறும் என்பதை அறிவிப்பார்களா? அதற்குக் காலவரையறை உண்டா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தூத்துக்குடி மருத்துவ மனையின் முக்கியத்துவத்தை உணர்ந்துதான் 260 படுக்கைகள் கொண்ட விஸ்தரிப்பு வேலைகள் 37.60 இலட்சம் செலவில் மூன்று பிரிவாகக் கட்டுவதற்கு தலைமைப் பொறியாளர் திருத்திய வரை பட மதிப்பீடு அனுப்பியிருந்தார்கள். மருத்துவப் பணி மற்றும் குடும்ப நல இயக்குநர் அதிலே சில மாற்றங்கள் செய்யவேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். அவை வரப்பெற்றவுடன் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.